*KALANJIYAM – International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed academic journal*
e-ISSN: 2456-5148
Vol. 2 No. 01 (2023)

**களஞ்சியம்**
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
**Vol. 2 No. 01 (2023): Kalanjiyam Feb 2023**

UGC Approved by Transparent Peer Review

# இஸ்லாமியச் சிற்றிலக்கியங்களில் விதி

# The Concept of Fate in Islamic Minor Literary Genre

Dr. U. Alibava[1*]

[1] Professor and Head, Department of Tamil Studies, Bharathidasan University, Tiruchirappalli – 620024, Tamil Nadu, India. ORCID: https://orcid.org/0000-0002-2051-7002

*தொடர்புக்கு: alibavapkm@gmail.com

**ARTICLE INFO**

**Article history**
Received: 14 January 2023
Revised: 19 January 2023
Accepted: 23 January 2023
Published: 01 February 2023

**Peer review**
Double-blind peer review

**Keywords**
Fate
Islamic Literature
Sataka Literature
Divine Decree
Salvation
Death
Worldly Life
Hereafter

**ABSTRACT**

This article examines the concept of fate (Qadar) as portrayed in Islamic minor literary Genre, particularly Islamic Sataka literature. According to Islamic belief, every human being's destiny is determined by Allah, and no one can alter His divine decree. Islamic Sataka poets have expressed various dimensions of fate through their literary compositions. The study focuses on four major themes: divine destiny, the difficulty of attaining salvation, death, and the relationship between worldly life and the hereafter. Through selected verses from the works of poets such as Gunangudi Masthan Sahib, S.M. Ahamad Das, Seyyid Buhari Pulavar, T.P. Abdur Rahman, Abdul Qadir Lebbai, and Nachikulathar, the article explores how fate influences human life and spiritual existence. It also highlights the importance of good deeds, patience, religious devotion, and righteous living. The study emphasizes that although human beings cannot escape divine destiny, they must fulfil their moral and religious responsibilities. Ultimately, Islamic Sataka poets convey the significance of accepting Allah's decree while leading a virtuous life in preparation for the hereafter.

**How to cite this article:** Alibava, U. (2023). இஸ்லாமியச் சிற்றிலக்கியங்களில் விதி [The Concept of Fate in Islamic Minor Literary Genre]. *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *2*(1), 55–58.
**Copyright and licence:** © 2023 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. https://creativecommons.org/licenses/by/4.0/

ஒவ்வொரு மனிதனுடைய தலைவிதியும் முன்பே இறைவனால் நிர்ணயிக்கப் பட்டுவிட்டது என்று இஸ்லாம் கூறுகிறது. விதியைப் பற்றியும், விதி சார்ந்ததனவற்றைப் பற்றியும் இஸ்லாமியச் சிற்றிலக்கியம் பாடிய புலவர்கள் பதிவு செய்துள்ளனர். குறிப்பாக இஸ்லாமியச் சதகம் பாடிய புலவர்களும் பாடியுள்ளனர். இஸ்லாமியச் சதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதி பற்றிய பதிவுகளை மட்டும் இக்கட்டுரை ஆராய்கிறது.

"அல்லாஹ் உங்களுக்கு விதித்ததைத் தேடிக் கொள்ளுங்கள்" (02:187).

"அங்கு அவன் அல்லாஹ் அவனுக்கு விதித்திருக்கும் முடிவையே காண்கிறான்;
அதன் படி அல்லாஹ் அவன் கணக்கைத் தீர்க்கிறான்" (24:39).

"அல்லாஹ்வின் கட்டளை (முன்பே) தீர்மானிக்கப் பெற்ற விதியாக இருக்கிறது"

*(33:28)*

எனத் திருமறையும்,

"நீங்கள் (வாழ்க்கையில்) சந்திக்கவிருக்கின்ற அனைத்தையும் (ஏற்கெனவே எழுதியாயிற்று. அவற்றை எழுதிய எழுதுகோலும் கூடக் காய்ந்துவிட்டது)[1]"

என்று ஹதீஸும் குறிப்பிடுகின்றன. விதியை விவேகம் வெல்ல முடியாது என்பதை,

விதியினால் வாழ்வதல்லாதவர்கள் தங்கள்வி
வேகத்தினாலாகுமோ (ம.மா.தோ.ச., பா.38)

என்று எஸ்.எம். அஹமதுதாஸ் சுட்டுகிறார். குணங்குடி மஸ்தான் சாகிபு,

எந்தலையி லிட்டவிதி யென்னமோ வென்னநான்
இடையாம லருள்பு ரியவும் (அ.ச., பா.2)

என்று வேண்டுகிறார். ஆனால் செய்யிது புகாரிப் புலவர் முயற்சி செய்யாமல் விதியை நொந்து கொண்டிருப்பவரை,

விதிவசம தென்றொரு முயச்சியுஞ் செய்யாது
வெறுமையை யடைந்த பதரு (அ.அ.ச., பா.83)

என்று திட்டுகிறார்.

## மோட்ச வழியில் தேர்வது அரிது

இவ்வுலகில் நற்செயல்கள் செய்து வாழ்பவன் இறுதியில் சுவர்க்கம் புகுவான்; இதனை,

"இறைநம்பிக்கை கொண்டு நற்செயல் செய்தவர்களே
சுவர்க்கவாசிகள் " (02:82;07:42; 10:26; 11:23; 29:58).
"நற்பாக்கிய சாலியே சுவனத்தில் இருப்பர்" (11:108).
"இறையச்சமுடையோரின் அருகே சுவர்க்கம் கொண்டு " (26:90; 50:31; 81:13).
"இறையச்சமுடையவர்களுக்கு சுவர்க்கமுண்டு" (68:43)

எனும் திருமறை வசனங்கள் உணர்த்துகின்றன. புலி, செந்நாய். கரடி, யானை, குதிரை, சிங்கம், விஷப்பாம்பு போன்ற விலங்குகளையும் ஜின்னையும் அடக்கிவிடலாம். பணத்தால் செய்யும் செயல்களைச் செய்துவிடலாம். ஆனால் மனத்தை அடக்கி மோட்ச வழியில் செல்வது அரிது என்பதைத் தே.ப. அப்துர்ரஹ்மான்,

வேங்கை சென்நாய்கரடி யானைகுதிரை சிங்கம்
வசமாக செய்துவிடலாம்
விஷப்பாம்பை மாலைபோ லணியலாம் நெருப்பிலே

வேகாதிருந்து விடலாம்
தீங்குசெய் ஜின் தேவை யடக்கிவிடலாம் முடலைத்
தண்ணீரில் மிதக்கவிடலாம்
பாங்கிலா திரும்பையுந் தங்கமாய்ச் செய்யலாம்
பிணத்தில்புகுந் தெழுந்துவிடலாம்
பூமியுள் புகுதலாம் பார்வை கொளாதுலாவலாம்
பல சித்துமாடிவிடலாம்
தூங்காது மனமசையா திருந்துமோட்ச வழியில்
தேர்வதரிதாகிவிடுமாம் (தி.ந.ச., பா.75)

என்று விளக்குகிறார். இப்பாடல் மோட்சவழியில் செல்வதற்குரிய நற்காரியங்களைச் செய்து அவ்வழியை அடைய வேண்டும் என்றும் உணர்த்துகிறது.

## மரணம்

ஒவ்வொரு மனிதனும் மரணத்தைச் சுவைக்க வேண்டியவனாவான்; மனிதன் மரணமடைந்தபின் மீண்டும் பிழைப்பது என்பது இயலாது. மரணமடைந்தவர்களின் இயல்பைத் திருமறை,

"(தீமைகளைச் செய்து கொண்டிருக்கும்) அவர்களில் இறுதியில்
எவருக்கேனும்
மரணம் வந்துவிடுமானால் "என் இறைவனே! நான் விட்டு வந்துள்ள உலகுக்கு
என்னைத் திரும்ப அனுப்புவாயாக! அங்கு நான் நற்செயல் புரிவேன்!"
என்று கூறத் தொடங்குவான். அவ்வாறு ஒரு போதும் நடக்காது" (23:99)

என்று திருமறை உணர்த்துகிறது. எல்லோருக்கும் மரணம் வரும்; மரணித்தவர்கள் யாரும் மீள முடியாது என்பதைத் தே.ப. அப்துர் ரஹ்மான் தெளிவுபடுத்துகிறார்; ஆகவே தீன்பணி நிலைநாட்டி வாழ வேண்டும் என்றும் இவர் வலியுறுத்துகிறார்.'

## இம்மை, மறுமை

மனிதனின் இவ்வுலக வாழ்வை இம்மை என்பர். மரணித்தபின் வாழும் வாழ்வு ஒன்று இருக்கிறது என்று இஸ்லாம் குறிப்பிடுகிறது. இதனை மறுமை என்பர்.

"உலகிலேயே அனைத்தையும் விரும்புவோருக்கு
மறுமையில் பாக்கியம் இல்லை" (02:200)

என்கிறது திருமறை. இக்கருத்தை அப்துல்காதர் லெப்பை,

மறுமையை நம்பாத மக்களிவ் வுலகிலே
மறைவழி வாழ மாட்டார்,
மண்ணிலே எல்லாம் முடித்திட நோக்குவார்
மனுநீதி பேண மாட்டார்,
வெறுமையாய் வாழ்வதால் ஆத்மீகம் இருளிலே

வீழ்ந்திடும் சாந்தி யில்லை,
வெற்றியே சுயநயம் ஆதலால் உள்ளங்கள்
வெந்திடும் நரக மாகும்,
பொறுமையை இழப்பதால் பூமியிற் சண்டைகள்
புரிவதே இன்ப மாகும்,
புழுவென அவர்வாழ்க்கை போவதே யன்றியொரு
புண்ணியம் கண்ட தாமோ! (இ.ச., பா.82)

என்று புலப்படுத்துகிறார். 'உரிய முறையில் ஓதின் இம்மை மறுமைப்பலன் மிகும்'" என்கிறார் மு. முஹம்மது தாஹா. 'மனைகூடி வாழ்ந்து வர மக்கள் சுக மாகிடும், மறுமைக்கு மின்பமுளதே', 'மண்டுகள் சொல்கின்றவாறுயிவன் சென்றிடில் மறுமையும் துயரமாமே', 'மறுமைக்கு வேண்டியது நற்பணிக ளென்றுநபி வழங்கினர்', 'மறுமையை நினைத்தபடி பொறுமையினைப் பேணிட வேண்டும்',"மார்க்கநெறி பேணா திருந்திடில் மறுமையில் வாட்டமிகும்' [8] போன்றவாறு நாச்சிகுளத்தார் மறுமை பற்றிக் குறிப்பிடுகிறார்.

"விதி' என்பது உண்டு; இறைவிதியை யாராலும் மாற்ற இயலாது என்பது மோட்சம், மரணம், இம்மை, மறுமை ஆகியவற்றின் வாயிலாக இஸ்லாமியச் சதகப் புலவர்கள் எடுத்துரைத்துள்ளனர் என்பதை இக்கட்டுரை சுட்டிக் காட்டியுள்ளது.

## துணை நூல்கள்:


1. நபிகளாரின் பொன்மொழிகள், ஸஹீஹுல் புகாரி, ஐந்தாம் பாகம், ப. 867.
2. சே.மு.மு. முகமதலி (ப.ஆ.), பொதக்குடி தே.ப. அப்துர் ரஹ்மானின் திருநபிச்சதகம், பா. 70.
3. மு. முஹம்மது தாஹா, சலவாத்துச் சதகம், பா. 53.
4. நாச்சிகுளத்தார், நாகூரார் சதகம், பா.4.
5. மேலது, பா. 47.
6. மேலது. பா. 50.
7. மேலது. பா. 63.
8. மேலது,பா. 96.